சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த சுற்றுலாத்துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (7.3.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி கலந்து கொண்டார்.

கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட

660 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், மார்ச் 9- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட 660 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், பரஞ்சேர்வழி ஓதாளகுல திருமண மண்டபத்தில் 04.03.2024 திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கலைஞர் மக்கள் சேவை முகாமில் தேர்வு செய்யப்பட்ட 660 பயனாளிகளுக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

இது குறித்து அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலுடன் காங்கேயம் ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒருங்கிணைப்பில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அந்தந்த ஊராட்சிக்கு நேரில் வந்து பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று பல விண்ணப்பங்கள் பெறப்பட்டது. மின் இணைப்பு உரிமைத் தினுடைய பெயர் மாற்றம் செய்யதல், ஆதார் அட்டை, குடும்ப அட்டையில் பெயர் சேர்ப்பது மற்றும் நீக்குவது, முதல மைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்திற்கான அடையாள அட்டைகள், அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் விடுபட்டு போன நபர்கள் அளிக்கும் விண்ணப்பங்கள், பட்டா மாறுதல், முதியோர் உதவித் தொகைக்கான விண்ணப்பம் ஆகிய விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பொதுமக்களை நேரில் சந்தித்து மனுக்களைப் பெற்று முடிந்த வரை இங்கேயே அதற்கான தீர்வுகள் காணப்பட்டது. பொது மக்களுடைய சிரமங்களை தவிர்ப்பதற்காக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பரஞ்சேர்வழி ஊராட்சியில் 1619 மனுக்கள் பெறப்பட்டு 688 மனுக்களுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. இன்று 503 பயனாளிகளுக்கு அதற்கான தீர்வு காணப்பட்டது. ஆலாம்பாடி ஊராட்சியில் 534 மனுக்கள் பெற்றப்பட்டு 296 பயனாளிகளுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. தற்போது 63 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்படவுள்ளது. கீரனூர் ஊராட்சியில் 380 மனுக்கள் பெற்றப்பட்டு 241 பயனாளிகளுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. தற்போது 30 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்படவுள்ளது. மறவாபாளையம் ஊராட்சியில் 404 மனுக்கள் பெற்றப்பட்டு 240 பயனாளிகளுக்கு முகாம் அன்றே தீர்வு காணப்பட்டது. தற்போது 64 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள மனுக்களுக்கு உரிய முறையில் பரிசீனை செய்யப்பட்டு முடிந்தளவு தீர்வுகள் வழங்குவதற்கு நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் விரைவாக நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் என்கிற திட்டத்தை அறிவித்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 85 ஆயிரம் குடும்ப அட்டைதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு துண்டு பிரசங்கள் வழங்கப்பட்டு என்னென்ன வகையான முகாமில் என்னென்ன விண்ணப்பங்கள் கொடுக்கலாம் என தகவல் தெரிவிக்கப்பட்டு, வரப்பெற்ற மனுக்களை பரிசீலனை செய்து உரிய சான்றுகளும், உத்தரவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், காங்கேயம் நகரக் கழகச் செயலாளர் வசந்தம் ந. சேமலையப்பன், ஒன்றிய கழக செயலாளர் கருணைப்பிராகஷ், காங்கேயம் ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர் மகேஷ்குமார், காங்கேயம் வட்டாட்சியர் மயில்சாமி, காங்கேயம் ஒன்றியக்குழு உறுப்பினர் ரவி உள்பட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற "எல்லோருக்கும் எல்லாம்" என்ற உயரிய சிந்தனையோடு மக்கள் தொண்டாற்றும் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கழக செய்தி தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, தலைமைக் கழகப் பேச்சாளர் வரகூர் க.காமராஜ் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

கோயில்களில் திருப்பணிக்கு நிதி உதவி அதிகரிப்பு!

முதல்வருக்கு பூசாரிகள் நலச் சங்கம் நன்றி! பி.வாசு அறிக்கை!

சேலம், மார்ச் 9- கோயில்களின் திருப்பணிக்கான நிதி உதவியை இரண்டரை லட்சம் ரூபாயாக உயர்த்திய முதல்வருக்கு பூசாரிகள் நலச் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் தலைவர் பி.வாசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோவில்களுக்கு திருப்பணி செய்ய தமிழ்நாடு அரசு வழங்கி வரும் திருப்பணி நிதியுதவி ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட் டுள்ளது.

முன்னதாக இந்த திருக்கோவிலுக்கு திருப்பணி மேற்கொள்ள ரூ.1 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. கட்டுமானப் பொருள்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு காரணமாக இந்த தொகை போதுமானதாக இல்லை. எனவே இந்த நிதியுதவித் தொகையை ரூ.2 லட்சமாக உயர்த்த வேண்டும் என்று சேலத்தை தலைமை இடமாகக்கொண்ட கோவில் பூசாரிகள் நலச்சங்கம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தது.

தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்ற பிறகு இந்த நிதியுதவித் தொகை ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டது.

ஆனால் இந்த ரூ.2லட்சம் நிதியுதவியில் ஜி.எஸ்.டி. வரி உள்ளிட்ட பல்வேறு பிடித்தங்கள் போக மிச்சம் ரூ.1.61 லட்சம் மட்டுமே இறுதியாகக் கிடைத்து வந்தது. அதாவது ரூ.39 ஆயிரம் பிடித்தம் செய்யப்பட்டது. பிடித்தம் செய்யப்பட்ட ரூ.39 ஆயிரம் போக எஞ்சிய ரூ.1.61 லட்சத்தில் திருப்பணி மேற்கொள்ள முடியாமல் கட்டுமானப்பணிகள் நிறைவடையாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் ஜி.எஸ்டி. வரியை ரத்து செய்ய ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு வலியுறுத்த வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசின் ஜிஎஸ்டி வரியை ரத்து செய்ய வேண்டும் அல்லது அதற்கு ஈடான தொகையைக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர்கள் அவர்களுக்கும் சேலத்தில் தலைமை இடமாகக் கொண்ட பூசாரிகள் நலச்சங்கம் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தது.

இந்த கோரிக்கையை பரிவுடன் ஏற்று திருப்பணி நிதியுதவியை ரூ.2.50 லட்சமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ளனர். பல்வேறு திருக்கோவில்களில் முடிவடையாமல் இருந்த திருப்பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு புத்தொளி பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

கோவில் பூசாரிகள் அனைவரும் திராவிட மாடல் ஆன்மீக அரசுக்குத் தலைமை ஏற்று சிறப்பாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள்!

தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும்-கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், **வடமதுரை**, **குஜிலியம்பாறை** ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **வடமதுரை கிழக்கு**, **வடமதுரை மேற்கு**, **குஜிலியம்பாறை வடக்கு**, **குஜிலியம்பாறை தெற்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **வடமதுரை கிழக்கு**, **வடமதுரை மேற்கு**, **குஜிலியம்பாறை வடக்கு**, **குஜிலியம்பாறை தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

வடமதுரை கிழக்கு ஒன்றியம்: ஊராட்சிகள்- 1.வேலாயுதம்பாளையம், 2.கானப்பாடி, 3.மோர்பட்டி, 4.புத்தூர், 5.சுக்காம்பட்டி, 6.சித்துவார்பட்டி, 7.கொம்பேறிபட்டி,8.சிங்கார கோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் அய்யலூர் பேரூர்.

வடமதுரை மேற்கு ஒன்றியம்: ஊராட்சிகள்- 1.பாகானத்தம், 2.பிலாத்து, 3. தென்னம்பட்டி, 4. கொசவபட்டி, 5.குளத்தூர், 6.பாடியூர், 7. வேல்வார்கோட்டை, 8.சிங்காரகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் வடமதுரை பேரூர்.

குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம்: ஊராட்சிகள்- 1.திருக்கூர்ணம், 2.ஆர்.வெள்ளோடு, 3.ஆலம்பாடி, 4.கோட்டானத்தம், 5.தோளிப்பட்டி, 6.கருங்கல், 7.டி.கூடலூர், 8.லந்தகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பாளையம் பேரூர்.

குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம்: ஊராட்சிகள்- 1.புதுக்கோட்டை, 2.ஆர்.கோம்பை, 3. வடுகம்பாடி, 4.வாணிக்கரை, 5.சின்னலுப்பை, 6.உல்லியகோட்டை, 7.மல்லப்புரம், 8.கூம்பூர், 9.கரிக்காலி ஆகிய 9 ஊராட்சிகள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 7.3.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தருமபுரி மேற்கு மாவட்டம்

தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும்-கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள தருமபுரி மேற்கு ஒன்றியத்திலிருந்து, பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத்திற்குள் வரும் **3 ஊராட்சிகள் சேர்த்து**, **தருமபுரி கிழக்கு**, **தருமபுரி வடக்கு**, **தருமபுரி தெற்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வரும் தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு ஆகிய ஒன்றியச் செயலாளர்கள் தொடர்ந்து அப்பொறுப்பு வகிப்பார்கள். புதியதாக பிரிக்கப்பட்ட தருமபுரி தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர் ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **தருமபுரி கிழக்கு**, **தருமபுரி வடக்கு**, **தருமபுரி தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

தருமபுரி கிழக்கு ஒன்றியம்: ஊராட்சிகள்-1.முக்கல் நாயக்கன்பட்டி, 2. நல்லசேன அள்ளி, 3.உங்கரான அள்ளி, 4.நூரல அள்ளி, 5.செட்டிக்கரை, 6.கொண்டகரஅள்ளி, 7.திப்பிரெட்டிஅள்ளி, 8.வே.முத்தம்பட்டி, 9.கோடுஅள்ளி ஆகிய 9 ஊராட்சிகள்.

தருமபுரி கிழக்கு ஒன்றியம்
செயலாளர் : **கே.பி.சக்திவேல்**
1/60, மாரியம்மன் கோவில் தெரு,
கவலைக்காரன்கொட்டாய்,
அன்னசாகரம் அஞ்சல்,
தருமபுரி மாவட்டம்- 636 704.

தருமபுரி வடக்கு ஒன்றியம்:
ஊராட்சிகள்- 1.மூக்கனூர், 2.அக்கமனஅள்ளி, 3. நாயக்கனஅள்ளி, 4.குப்பூர், 5.வெள்ளோலை, 6. கொண்டம்பட்டி, 7.வெள்ளாளப்பட்டி ஆகிய 7 ஊராட்சிகள்.
செயலாளர் : **என்.ஏ.மாது**, எ.நடுப்பட்டி,அக்கண அள்ளி அஞ்சல்,தருமபுரி வட்டம் & மாவட்டம்-636 704.

தருமபுரி தெற்கு ஒன்றியம்:
ஊராட்சிகள் - 1.கே.நடுஅள்ளி, 2. அளேதருமபுரி, 3.செம்மாண்டகுப்பம், 4.ஆண்டிஅள்ளி, 5.கிருஷ்ணாபுரம், 6.புழுதிக்கரை, 7.கோணங்கிநாயக்கன அள்ளி ஆகிய 7 ஊராட்சிகள்.

தருமபுரி தெற்கு ஒன்றியம்
பொறுப்பாளர் : டாக்டர் எம்.பிரபு ராஜசேகர், சின்னேரி மோட்டுப்பட்டி கிராமம்.புழுதிக்கரை அஞ்சல், தருமபுரி மாவட்டம் -635 202.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 7.3.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

காலம் வென்று தமிழர் நினைவில் வாழும் பேராசான்!

முத்தொளிபோல் சான்றோர்குள்ளே
முதன்மையர் பேராசானே!
வித்தகர்நம் பெரியார்அண்ணா
வினைத்திட்பக் கலைஞரோடே
ஒத்துரிமைகலந்தேஒன்றி
உயிர்த் தமிழ்நம் தமிழ்நாட்டைத்தான்
புத்துணர்ச்சிவெள்ளம்பாய்ச்சி
புதுமைவென்றபேராசானே!

நிறைகுடம்போல் வாழ்வுகண்டார்
நீதிநேர்மைஅறம்போல் வாழ்ந்தார்
மறைநம்மின் திருக்குறட்கே
மறுபதிப்பாய் வாழ்வியல்தேர்
முறையியல்தம் வாழ்வில் கொண்டார்
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
இறைஆட்சிக் களங்கள் வெல்ல
இதயம்தந்தார்பேராசானே!

கழகமேதன் உயிர்ப்பாய் மேன்மேல்
கரைகாணாச்சோதனையில்
தழல்மாற்றிக் கலைஞர் தன்னின்
மற்றுமொருஅண்ணாவாக
நிழல்தந்தார் என்றென்றைக்கும்
நீங்காத்தோழமைக்குள் வாழ்ந்தார்!
எழக்கழகமகலைஞர் ஆட்சி
என்றென்றும் துணைக்கோவானார்

அரசியல்வான்போராசானே!
அருந்ததியாய் ஒளிர்ந்தார் அம்மா!
வரம்தவம்போல் கலைஞருக்கோ
வாய்மைதூய்மைநம்பிக்கைக்கே
கரம்தந்தார் இதயம் தந்தார்
காண்பரியமுதல்வர் இஸ்டாலின்
நிரந்தரமாம் ஆட்சிபோற்றி
நிலையாய்வாழ் பேராசானே!

காலங்கள் கடந்தபோதும்
கழகம்தி.மு.க. தான் வாழும்
காலங்கள் தோறும் விஞ்சும்
கலைஞர்தம் மூச்சுக் காற்றாய்
காலங்கள் கடந்தும் ஈடில்
காப்புதமிழ்ப் பேராசான்தான்
காலம்வளர் தமிழாய் ஓங்கி
தமிழர்தம் நினைவில் வாழ்வார்!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்
உலக அமைப்பாளர்
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் பிறந்த 3 பெண் குழந்தைகளுக்கும் 2 ஆண் குழந்தைகளுக்கும் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தங்க மோதிரம் அணிவித்தார். பின்னர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். ஜெ.ஜெயபால், சங்கீதாஅரசி ரவிதுரை, இளவரசி ஜெயபால், சாவித்திரி பாலு, செல்வம், பாபுஜிவானந்தம், ச.பாலாஜி, எத்திராஜன், அருள்மொழி, ப.அன்பரசு, கலைச்செல்வன், சங்கர், ராஜா, சுந்தர், அசோக், திவாகர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர், முன்னாள் கழகப் பொதுச் செயலாளர், மறைந்த இனமானபேராசிரியர் பெருந்தகை அவர்களின் 4ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநி மாணிக்கம் எம்.பி, மாநகரக் கழகச் செயலாளர் சண்.இராமநாதன் உள்ளிட்டக் கழக தோழர்கள் பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.